Source: *Tamil Murasu*, p2
Date: 11 November 2022

அறிவியல், தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பில் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் அழைப்பு

# அணிசேரா பன்னாட்டு ஒத்துழைப்பு தேவை

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பதற்றத்தால் உலகில் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ள போதும், அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் தொடர்பில் உலகநாடுகள் ஒத்துழைக்க வழி இருப்பதாக வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அறிவியல், தொழில்நுட்பம், விநியோகச் சங்கிலிகள் ஆகியவற்றில் புதிய அணிசேரா இயக்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார். இரு பேரரசுகளுக்கு இடையே உண்மையாக தொழில்நுட்ப, பொருளியல் ரீதியான பிளவு ஏற்பட்டால், பெரும் சேதம் உண்டாகலாம் என்ற அவர், அதை எதிர்கொள்ள அந்த இயக்கம் உதவும் என்றார் அமைச்சர்.

நேற்று முன்தினம் நடந்த நெக்ஸ்ட் ஸ்டெப் (பொருளியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு) உலகளாவிய மாநாட்டில் டாக்டர் விவியன் கலந்துகொண்டு பேசினார்.

அனைத்துலகப் பொருளியலுக்கான பீட்டர்சன் கழகம், லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளி ஆகிய இரண்டு கொள்கை ஆய்வு நிலையங்களும் மாநாட்டை நடத்துகின்றன. ராஃபிள்ஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் தொடங்கிய மாநாடு இன்று நிறைவுபெறும்.

அந்த அணிசேரா இயக்கம் தற்போதைய காலகட்டத்தில் பன்முனைத் தன்மையும் வெளிப்படையானதாகவும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்கும் என்று அடாக்டர் விவியன் கூறினார்.

"வெளிப்படையான அறிவியலுக்குக் கடப்பாட்டுடன், அறிவுசார் சொத்தின் நியாயமான பகிர்தலும் பயனடைதலும், இருக்க வேண்டும். நாம் சார்ந்துள்ள அணியை வைத்து நம்மை மதிப்பிடாமல், புத்தாக்கம், நம்பகத்தன்மை ஆகியவற்றில் சிறந்து விளங்குவதில் போட்டியிடும் கட்டமைப்பும் அதில் இருக்க வேண்டும்," என்று டாக்டர் விவியன் குறிப்பிட்டார்.

பழைய அணிசேரா நாடுகள் இயக்கத்தில் 120 நாடுகள் பங்கு வகித்தன. அந்த அமைப்பு, இந்தியா உள்ளிட்ட நாடுகளால் தொடங்கப்பட்டது. அமெரிக்காவுக்கும் அப்போதைய சோவியத் யூனியனுக்கும் அவற்றின் கூட்டணி நாடுகளுக்கும் இடையிலான பனிப்போர் உச்சத்தில் இருந்த 1961ஆம் ஆண்டு, அந்நாடுகள் அதில் கலந்துகொள்ளாமல் வேறு திசையில் பயணிக்க விரும்பின. அணிசேரா நாடுகள் இயக்கத்தில் சிங்கப்பூர் 1970ஆம் ஆண்டு இணைந்தது.

புதிதாக அணிசேரா நாடுகள் இயக்கத்தைத் தொடங்க இன்னும் காலம் கனியவில்லை. இருப்பினும் பிற நாடுகளுக்கு செயல்படும் தன்னதிகாரம் உள்ளது என்பதையும் அவை முடிந்தவரை எந்த அணியையும் சார்ந்திருக்க மறுக்கும் என்பதையும் எடுத்துச்சொல்லவே இந்த யோசனையை முன்வைத்ததாக டாக்டர் விவியன் கூறினார்.

"சுயமரியாதை உள்ள எந்த ஆசிய நாடும் சிக்கிக் கொள்ளவும் அடிமையாக இருக்கவும் தங்களை வைத்து மறைமுகப் போர்கள் நடத்தப்படுவதையும் விரும்பாது என்று நினைக்கிறேன். அதனால் மற்ற உலக நாடுகளின் இந்த விருப்பத்துக்கான காரணங்களை நான் முன்வைக்கிறேன்," என்றார் டாக்டர் விவியன்.



டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன்
படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.